**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. **CC.75/2022** |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw-21 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : **திரு.நம்பிராஜன்(காவல் ஆய்வாளர்)**

Father's Name :

Village :

Taluk :

Age :

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

13.11.2025

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்பொழுது விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.08.2022 ம் தேதி ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய குற்ற வழக்கு எண்.109/2022, பிரிவுகள்–279, 337, 304(A) இதச வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதிகாலை 04.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சங்கரசுப்பு, மகேந்திரன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மாதிரி வரைபடமானது **அ.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) பின்னர் 06.00 மணிக்கு காவல் நிலையம் வந்து இந்த வழக்கில் இறந்த கிருஷ்ணலீலாவதி என்பவரின் பிரேதத்தினை திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பிரேத விசாரணை செய்து பின்னர் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியும், பிரேத விசாரணை சாட்சிகளை விசாரணை செய்தும், பிரேதத்தை நல்லடக்கம் செய்ய உறவினர்கள் வசம் ஒப்படைத்தும் நிலையம் வர சார்பு ஆய்வாளர் செய்யது இப்ராகிம் என்பவரை நியமனம் செய்தேன். பின்னர் 08.00 மணிக்கு கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று வாதியையும், சம்பவ சாட்சியான TATA ACE வாகனத்தின் ஓட்டுனரான சுந்தரமூர்த்தியையும் விசாரணை செய்துவாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் 09.00 மணிக்கு இந்த வழக்கில் இறந்த கபிலேஷ் என்ற குழந்தையின் பிரேத்தை அடையாளம் காட்டியதற்காக ராஜதுரை மற்றும் சமுத்திரம்ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 10.00 மணிக்கு பிரேத விசாரணைக்கு ஆஜராகுமாறு பஞ்சாயத்தாருக்கு 09.45 மணிக்கு சம்மன் சார்பு செய்தேன். பின்னர் சவக்கிடங்கில் வைத்து 10.00 மணி முதல் 11.00 மணி வரை பிரேத விசாரணை குறித்தும், பிரேத பரிசோதணைக்கு உட்படுத்தி உறவினர்களிடம் ஒப்படைக்க காவலர் விக்னேஷ் என்பரை நியமித்தேன். கபிலேஷ் என்பவரது பிரேத விசாரணை அறிக்கையானது **அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) பின்னர் காவல் நிலையம் வந்து இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களை வாகனத்தில் சிகிச்சைக்கு அனுப்பிவைத்த சாட்சி குணசேகரன் மற்றும் வெங்கடேஷ்வரன் ஆகியோர்களை காவல் நிலையத்திற்கு வரவழைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காவல் நிலையத்தில் ஆஜரான எதிரி சிவராஜ் என்பவரை 16.00 மணிக்கு கைதிற்கான காரணத்தினை கூறி கைது செய்தேன். பின்னர் திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் வகுத்த கட்டளைகளை பின்பற்றினேன். பின்னர் எதிரி சிவராஜ் என்பவருக்கு பிணை கொடுக்க யாரும் முன்வராத காரணத்தினால், கனம் நீதிமன்றத்தில் அழைப்பின் போது ஆஜராகும்படி 16.30 மணிக்கு தக்க பிணையில் விடுவித்தேன்.

5) இவ்வழக்கில் இறந்த கிருஷ்ணலீலாவதி என்பவரை திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் வைத்து பிரேத விசாரணை செய்த ஏழாயிரம் பண்ணை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் செய்யது இப்ராகிம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் விசாரித்த பிரேத விசாரணை சாட்சிகளை தொடர்பு கொண்டு விசாரித்தபோது அவரிடம் சொன்னது போலவே என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னர் சார்பு ஆய்வாளருக்கு உதவியாக உடன் சென்ற காவலர்கள் இருளாண்டி மற்றும் விக்னேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6) பின்னர் இந்த வழக்கினை 13.08.2022 அன்று எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் சிவா, மாணிக்கம், குமார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கினை 15.08.2022 அன்று இவ்வழக்கின் சாட்சிகளான தினேஷ், ஈஸ்வரன், பரமசிவன், ரமேஷ், வீரமணி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 17.08.2022 அன்று வழக்கின் சாட்சிகளான ராணி, மனோஜ்குமார், விஷ்வாதினி, முகேஷ்பிரியா, முத்துமாரி, சொர்ணம் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை 22.08.2022 அன்று மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன்.

7) பின்னர் 25.08.2022 அன்று இவ்வழக்கின் சாட்சிகளான கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனை உதவி அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர். வினோதினி மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உதவி பேராசிரியர் டாக்டர். பிரசன்னா , மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. செல்வராசு ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, காயம்பட்டவர்களுக்கான காயச்சான்றுகளை பெற்றேன். இறந்துபோன கிருஷ்ணலீலாவதி மற்றும் கபிலேஷ் ஆகியோர்களுக்கு உடற்கூறாய்வு அறிக்கை பெற்றேன். கிருஷ்ணலீலாவதியின் உடற்கூறாய்வு அறிக்கையானது **அ.சா.ஆ.26** ஆகவும், கபிலேஷ் என்பவரின் உடற்கூறாய்வு அறிக்கையானது **அ.சா.ஆ.27** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

8) மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. செல்வராசு என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்திற்கு காரணமான வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வுச்சான்றினை பெற்றேன். 10.11.2022 இந்த வழக்கில் கோவில்பட்டி அரசு

தலைமை மருத்துவமனை உதவி அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர் வினோதினி அவர்கள் கொடுத்த காயச்சான்றின் படி இந்த வழக்கின் சட்டப்பிரிவினை பிரிவுகள்– 279, 337, 304(A) இதச வில் இருந்து 279, 337, 338, 304(A) இதச வாக சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா. ஆ.28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதியில் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிமீது குற்றம் புலனான காரணத்தினால் 279, 337, 338, 304(A) இதச வாக குற்ற இறுதியறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் புகார் மனு எங்கு வைத்து யாரால் கொடுக்கப்பட்டது என்பது குறித்து விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் முத்துச்செல்வி என்பவர் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் பெறப்பட்டதாக தெரியவந்தது. எனது விசாரணையில் அ.சா.1 உடன் இருந்தவர் தான் புகார் மனு எழுதிக்கொடுத்ததாக எதுவும் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 24 நபர்கள் விபத்துகுள்ளான TATA ACE ன் எந்த பகுதியில் உட்கார்ந்திருந்தார்கள் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார்களா என்றால் வாகனத்தில் இருந்தோம் என்று மட்டுமே கூறியுள்ளார்கள்.

2) அதே போல் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 24 நபர்கள் டிப்பர் லாரியை ஓட்டி வந்த நபரின் பெயர் மற்றும் விலாசம் குறித்து பின்னர் தெரிந்து கொண்டோம் என்று வாக்குமூலம் அளித்துள்ளார்களா என்றால் சரிதான், சம்பவம் நடந்தவுடன் அங்கு வைத்தே கேட்டுத்தெரிந்துகொண்டோம் என்று சொன்னார்கள். அ.சா.2 சுந்தரமூர்த்தி என்பவர் தான் விபத்துகுள்ளான TATA ACE வாகனத்தின் ஓட்டுனர் என்றால் சரிதான். அ.சா.2 சுந்தரமூர்த்தி என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் எதிரியை நேரடியாக தெரிந்துகொண்டேன் என்று சொல்லியுள்ளாரா என்றால் பின்னர் பெயர் மற்றும் விலாசம் தெரிந்து கொண்டேன் என்று சொல்லியுள்ளார்.

3) TN 75 AT 7535 பதிவெண்கொண்ட வாகனத்தினை ஓட்டிவந்த ஓட்டுனர் எதிரி தான் வாகனத்தினை ஓட்டிவந்தார் என்பதை நிரூபணம் செய்யும் பொருட்டு அதன் உரிமையாளரை விசாரித்துவாக்குமூலம் எதுவும் பதிவு செய்தேனா என்றால் போன் மூலம் விசாரித்தேன் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. எனது விசாரணையில்

விபத்துக்குள்ளான இரண்டு வாகனங்களும் நேருக்கு நேராக மோதியதாக தெரிய வரவில்லை என்றால் சரிதான். விபத்துகுள்ளான TATA ACE வாகனம் 11 நாட்கள் காலதாமதமாகவும், டிப்பர் லாரி 14 நாட்கள் காலதாமதமாகவும் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். விபத்துக்குள்ளான TATA ACE மற்றும் டிப்பர் லாரி இரண்டும் சரக்கு வாகனங்கள் என்றால் சரிதான்.

4) மோட்டார் வாகனச்சட்டப்படி சரக்கு வாகனத்தில் மனிதர்களை ஏற்றிவர அனுமதி கிடையாதென்றால் சரிதான். சட்டத்தில் அனுமதிக்காத செயலை செய்யும் வாகனத்தின் ஓட்டுனர் தான் சட்டத்தை மீறி அசட்டையாக செயல்பட்டுள்ளார் என்று கருதலாம் என்றால் சரியல்ல. விபத்திற்கான காணரம் TATA ACE வாகனத்தின் ஓட்டுனர் தான் என்றும், இறந்த நபர்களுக்கும், காயம்பட்டவர்களுக்கும் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கில் சொன்ன நாள் நேரத்தில் புகார் மனுவானது கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரவர விசாரணை செய்யாமல் எதிரி மீது ஒருதலை பட்சமாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நாள் நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லப்படும் சிப்பிப்பாறையை சேர்ந்த நபர்களை சம்பவ சாட்சிகளாக சேர்த்துள்ளேனா என்றால் வெங்கடேஷ்வரன் என்பவரை சேர்த்துள்ளேன்.

6) இந்த வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.